


குன்றத்தூரில் நடைபெற்ற காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் கழக செயல்வீரர்கள் கூட்டம் மற்றும் வேட்பாளர்கள் அறிமுக கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் தா.மோ.அன்பரசன் சிறப்புரையாற்றினார். அருகில் மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் இ.கருணாநிதி, எம்.எல்.ஏ., வரலட்சுமி மதுசூதனன், எம்.எல்.ஏ., து.மூர்த்தி, மாவட்ட கழகப் பொருளாளர் வெ.விசுவநாதன் மற்றும் கழக வேட்பாளர்கள் டாக்டர் கிருத்திகா தேவி, எம்.கே.டி.கார்த்திக் ஆகியோர் உள்ளனர்.



சென்னை கிழக்கு மாவட்டம் துறைமுகம் கிழக்கு பகுதிக்குட்பட்ட 55, 55அ, 55ஆ, 56, 56அ, 60, 60அ ஆகிய ஏழு வட்டங்களின் தேர்தல் பணிமனைகளை இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளர் பி.கே.சேகர்பாபு திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் எஸ்.இராஜசேகர், இசட்.ஆசாத், பி.ஸ்ரீராமுலு, ஜி.எம்.தேவன், எம்.விஜயகுமார், என்.பி.எம்.ஷேக்அப்துல்லா, இப்ராஹிம்கனி, ஆர்.கலைச்செல்வி, பி.விஜயகுமார், எல்.சம்பத்குமார், பா.பிரதாப்குமார், எம்.விநாயகம், ப.ஜெகதீஷ் துறைமுகம் கிழக்கு / மேற்கு வட்ட கழக செயலாளர்கள்: எல்.சத்தியநாராயணன், எஸ்.புகழேந்தி, ஆர்.எ.அஸ்லாம், டி.கதிரவன் (எ) ராஜா, எம்.பரத்குமார், கே.கவியரசு, ஆ.நா.பார்த்திபன் மற்றும் கழக நிர்வாகிகள், தோழமைக் கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

### திருவள்ளூர் – திருத்தணி தொகுதிகளில் போட்டியிடும் வேட்பாளர்களை பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்து

## மீண்டும் திராவிட மாடல் அரசை அமைக்க திருவள்ளூர் மேற்கு மாவட்டக் கழகத்தினர் பணியாற்றுவீர்!

### மாவட்டச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ. சிறப்புரை!

*திருவள்ளூர், மார்ச் 31*

திருவள்ளூர் மேற்கு மாவட்டம் திமுக சார்பில் திருவள்ளூர் தொகுதியில் போட்டியிடும் கழக வேட்பாளர் வி.ஜி.ராஜேந்திரன் மற்றும் திருத்தணி தொகுதியில் போட்டியிடும் கூட்டணி கட்சி தேமுதிக வேட்பாளர் டி.கிருஷ்ணமூர்த்தி ஆகியோரை வெற்றி பெற செய்திடும் வகையில் அவர்களை ஆதரித்து திருவள்ளூரில் உள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் திருவள்ளூர் மேற்கு மாவட்ட ஆலோசனைக் கூட்டம் மாவட்ட அவைத் தலைவர் கே.திராவிடபக்தன் தலைமையில் நடைபெற்றது இதில்

தலைமை செயற்குழு உறுப்பினர் திருத்தணி எம்.பூபதி, தொகுதி பார்வையாளர் மாஸ்டர் சேகர், மாநில நிர்வாகிகள் ஆர்.டி.இ.ஆதிசேசன், ஒ.ஏ.நாகலிங்கம், மாஸ்டர் குருதாஸ், மாவட்ட நிர்வாகிகள் டாக்டர் வி.சி.ஆர்.குமரன், உதயமலர் பாண்டியன், சி.ஜெயபாரதி, எம்.மிதுன் சக்ரவர்த்தி, ப.சிட்டி பாபு, எஸ்.கே.ஆதாம், ராஜேஸ்வரி ரவீந்திரநாத் ஆகியோர் முன்னிலை வகித்தார்கள்

இதில் திருவள்ளூர் மேற்கு மாவட்டச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ கலந்து கொண்டு 2026 சட்டமன்றத் தேர்தலில் திருவள்ளூர் தொகுதியில் போட்டியிடுவதற்காக திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினர் விஜி ராஜேந்திரனை மீண்டும் கழக வேட்பாளராக தலைவர் அவர்கள் அறிவித்துள்ளார் அதேபோல் திருத்தணி தொகுதியில் இந்தியா கூட்டணி கட்சி சார்பில் தேமுதிக வேட்பாளர் கிருஷ்ணமூர்த்தி அவர்களே அறிவித்துள்ளார்கள் எனவே திருவள்ளூர் மேற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட மாநில மாவட்ட நிர்வாகிகள் ஒன்றிய நகர பேரூர் கழக செயலாளர் கழக மூத்த முன்னோடிகள் இந்நாள் முன்னாள் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் அனைவரும் ஒன்றிணைந்து இரவும் பகலும் பாராமல் பட்டி தொட்டி முழுவதும் சென்று பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற செய்ததற்கான பணிகளை மேற்கொண்டு மீண்டும் கழகத் தலைவர் தளபதி அவர்கள் தலைமையிலான திராவிடம் மாடல் அரசை மீண்டும் அமர வைத்து அயராக பணியாற்ற வேண்டுமென சிறப்புரை யாற்றினார். ஒன்றிய நகர பேரூர் கழக செயலாளர்கள் சி.சு.ரவிச்சந்திரன், கூளூர் எம்.ராஜேந்திரன், எஸ்.மகாலிங்கம், க.அரிகிருஷ்ணன், மோ.ரமேஷ், டி.மோதிலால், பிரகாஷ் ஞான ஒலி, வி.வினோத் குமார், ஆர்த்தி ரவி, என்.கிருஷ்ணன், சி.ஜெ.சீனிவாசன், சி.என்.சண்முகம், பெ.பழனி, ஆர்.ராஜேந்திரன், பிடி.சந்திரன், க.சம்பத், ம.ராகு, டி.ஆர்.பாபு, சி.ஜெ. செந்தில் குமார் மற்றும் திருவள்ளூர் மேற்கு மாவட்டத்தில் உட்பட்ட கழக நிர்வாகிகள் இந்தியா கூட்டணி கட்சி சார்ந்த நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



சென்னை மேற்கு மாவட்டம், அண்ணாநகர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, 101 வது வட்டக் கழக தேர்தல் பணிமனையினை மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் ஆதரவு பெற்ற தி.மு.கழக வெற்றி வேட்பாளர் நே.சிற்றரசு, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன் ஆகியோர் திறந்து வைத்தனர். இதில் சட்டமன்ற உறுப்பினர் எம்.கே.மோகன், வடக்கு பகுதிச் செயலாளர் ச.பரமசிவம், 101 வது வட்டச் செயலாளர் க.கோவிந்தராஜ், 101 வது வார்டு மாமன்ற உறுப்பினர் மெட்டில்டா கோவிந்தராஜ், 102 வது வார்டு மாமன்ற உறுப்பினர் ராணி ரவிச்சந்திரன், 101 வது வட்டக் கழக நிர்வாகிகள், தோழமைக் கட்சி நிர்வாகிகள் மற்றும் கழக உடன் பிறப்புகள் பலர் கலந்து கொண்டனர்.

### மாநிலம் முழுவதும் தேர்தல் பரப்புரையில் ஈடுபடப்போகும்

# முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு மாபெரும் வெற்றி - பேராசிரியர் இல்லத்து வாழ்த்துகள்!

### முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு–இனமானப் பேராசிரியரின் புதல்வர் அ.அன்புச் செல்வன் வாழ்த்துக் கடிதம்!



***சென்னை, மார்ச் 31***

**தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல் பரப்புரையில் ஈடுபடும் கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு வாழ்த்து தெரிவித்து இனமானப் பேராசிரியர் அவர்களின் புதல்வர் அ.அன்புச் செல்வன் கடிதம் எழுதியுள்ளார்.**

அக்கடிதத்தில் மாநிலம் முழுவதும், தேர்தல் பரப்புரையில் ஈடுபடப்போகும் தங்களுக்கு அன்பான வாழ்த்துகள். மாபெரும் வெற்றிக்கு இனமானப் பேராசிரியர் இல்லத்து வாழ்த்துக்கள் என்றும், அ.அன்புச் செல்வன் அவர்கள் அக்கடிதத்தில் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இது குறித்து கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு அ.அன்புச்செல்வன் அவர்கள் எழுதியுள்ள கடிதம் வருமாறு:-

**அன்பு கெழுமிய நண்பர்,**
**தலைவர், ஸ்டாலின் அவர்களே,**

அன்பான வணக்கம்,

இன்று ( 30/03/2026 ) தாங்கள் சிறப்புறச் சேவைகள் புரிந்திருக்கும் கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்கு நான்காவது முறையாக வேட்பு மனுத் தாக்கலை முடித்துவிட்டு மாநிலம் முழுவதும் தேர்தல் பரப்புரையில் ஈடுபடப் போகும் தங்களுக்கு அன்பான வாழ்த்துகள்! மாபெரும் வெற்றிக்கு இனமானப் பேராசிரியர் இல்லத்து வாழ்த்துகள்!

**சவால்கள் நிறைந்த 2026 சட்டமன்றத் தேர்தல் தொடர்பான மகத்தான கூட்டணியை உருவாக்க தாங்கள் மேற்கொண்ட முயற்சிகள், தொகுதி உடன்பாடு பணிகள், இரவு பகல் பாராமல் உழைத்து கழக வேட்பாளர்களைத் தேர்வு செய்ய தினமும் 10 மணிநேரத்திற்கு மேலாக நேர்காணல் நடத்தி அருமையான வேட்பாளர்களை களம் காணச் செய்துள்ளீர்கள். தொடர் வெற்றிகளின் நாயகரான தாங்கள் உழைப்பின் உச்சம் தாங்கள் என்பதை நிரூபித்து விட்டீர்கள்! ஒரு மாபெரும் சேனையின் படைத்தளபதியாக விளங்கும் தங்களின் வல்லமைகளைக் கண்டு எதிரிகள் மிரண்டு போய் உள்ளார்கள். தேர்தல் Perception போரில் வெற்றியைப் பதிவு செய்து உள்ளீர்கள்.**

தங்களின் சலியாத உழைப்பிற்கு மகுடம் சூட்டும் வகையில் மிக நேர்த்தியாக தேர்தல் அறிக்கையை வெளியிட்டு இருக்கிறீர்கள். தேர்தல் அறிக்கையின் ஒவ்வொரு சொல்லும் தமிழகத்தின் பல்துறை வளர்ச்சிக்கு தேர்தல் அறிக்கை வழிகோலும் என்பது உறுதி.

**200 தொகுதிகளுக்கு மேல் வெல்லும்!**

தங்களின் ஐந்தாண்டு கால சரித்திர சாதனைகளும், கடும் உழைப்பும், கட்டுப்கோப்பான கழக அமைப்பும், நிர்வாகிகளும், தொண்டர்களும், இயக்க அனுதாபிகளும், தமிழ்நாட்டை 2030 ஆண்டுகளில் நம்பர் ஒன் மாநிலமாக மாற்ற நினைக்கும் திராவிட மாடல் அரசை மீண்டும் அரியனையில் ஏற்றுவார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தின் கூட்டணி 200 தொகுதிகளுக்கு மேல் வெல்லும்.

*21.03.26* தேதியிட்ட முரசொலியில் உடன்பிறப்புகளுக்காக "உங்களில் ஒருவன்" மடலை படித்து மெய்சிலிர்த்தேன். அவ்வரிகள்

"தலைவர் முதல் தொண்டர் வரை அத்தனை பேரிடமும் ஒரே உணர்வு கொண்ட இயக்கம்தானே நம் திராவிட முன்னேற்றக் கழகம்!

இத்தகைய பாச உணர்வு தான் தொண்டர்களை வாழையடி, வாழையாக கழகத்தின் பால் ஈர்க்கிறது. இத்தகைய தொண்டர்களை கொண்ட இயக்கத்தினை வீழ்த்த எந்த சக்தியாலும் முடியாது. வீழ்த்த நினைத்தவர்கள் ஏராளமானவர்கள் ஆனால் அவர்கள்தான் தோல்வியை தழுவினார்கள். கழகம் அதே உயிர்ப்புடன் ராஜ நடை போட்டு கம்பீரத்துடன் களத்தில் 2026 சட்டமன்ற தேர்தல் களத்தில் நிற்கிறது.

உறுதிசெய்யப்பட்டு விட்டது நம் வெற்றி. ஆனாலும் அறுவடைக்கு தயாராக இருக்கும் பயிரை பத்திரமாக அறுவடை செய்வது உடன்பிறப்புகளின் கடமை. களத்தில் கண் துஞ்சாது உழைத்து வெற்றிக் கணியை பறித்து நம்மையெல்லாம் ஆளாக்கிய பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர், இனமானப் பேராசிரியர் போன்ற தலைவர்களுக்கு காணிக்கையாக்குவோம்.

மீண்டும் வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

வெல்வோம் ஒன்றாக!!! தொடரட்டும் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்!!

வாழ்க வளர்க வெல்க திராவிட முன்னேற்றக் கழகம்!!!

**இவண்,**
**அ. அன்புச்செல்வன்,**
**30/03/2026**

இவ்வாறு அ.அன்புச் செல்வன் அவர்கள் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.



சென்னை மேற்கு மாவட்டம், அண்ணா நகர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வடக்கு பகுதி சார்பில் அமைக்கப்பட்டுள்ள தேர்தல் பணிமனை மற்றும் வட்ட கழகங்கள் 100, 100அ, 101, 101அ, 102, 102அ, 103, 103அ ஆகியவற்றில் தேர்தல் பணிமனைகள் அமைக்கப்பட்டுள்ளன. இப்பணிமனைகளை, கழகத் தலைவர், முதலமைச்சர் அவர்களின் நல்ஆசியுடனும், கழக இளைஞரணிச் செயலாளர், துணை முதலமைச்சர் அவர்களின் நல்வாழ்த்துகளுடனும் களம் காணும் மாவட்டக் கழகச் செயலாளரும் அண்ணா நகர் தொகுதி வெற்றி வேட்பாளருமான நே.சிற்றரசு தலைமையில், மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், சட்டமன்ற உறுப்பினர்கள் எம்.கே.மோகன், அ.வெற்றியழகன் மற்றும் பகுதி செயலாளர் ச.பரமசிவம் ஆகியோர் திறந்து வைத்து, தேர்தல் பணிகள் குறித்து ஆலோசனைகளை வழங்கினர்.